சாட்சிய வாக்குமூலம்

(கு.வி.மு.ச.அத்தியாயம் 23)

முதல் கூடுதல் உதவி அமர்வு நீதிமன்றம், ஈரோடு மாவட்டம்

அமர்வு வழக்கு எண்.102/2017

2026ம் ஆண்டு ஜனவரி மாதம் 30–ம் தேதி நாள் அரசு தரப்பு சாட்சியாக அ.த.சா.–1வது சாட்சியாக விசாரிக்கப்படுபவர் 1968ம் ஆண்டு 54 வது சட்டத்தில் உள்ள 5(2) பிரிவின்படி ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது. 1,2 எதிரிகள் ஆஜர்.3ம் எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர் ஆகவில்லை அவர் கு.வி.மு.ச.பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனு அனுமதிக்கப்பட்டது.அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வாசுதேவன் | மாவட்டம் | : | |
| த/பெ.பெயர் | : | வேலப்பமுதலியார் | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| வட்டம் | : | | | | |

<u>மனுவின் பெயரில் அழைக்கப்பட்டு எதிரிகள்தரப்பில்குறுக்குவிசாரணை:–</u>

1. இறந்துபோன அருண்ராம் என்னுடைய மகன் என்றால் சரிதான். கோமதி என்னுடைய மூத்தமகள் ஆவாள். அருண்ராம் இளைய மகன் ஆவார். கோமதியை எங்கு திருமணம் செய்து கொடுத்திர்கள் என்றால் திண்டுக்கலில் பல் மருத்துவர் சரவணன்வெங்கடன்ராமனுக்கு என்னுடைய மகளை திருமணம்செய்து கொடுத்தேன். என் மகளும் அவருடைய கணவரும் பல் மருத்துவர்கள் ஆவார்கள்.

2. சரவணன்வெங்கட்ராமனுக்கு உடன்பிறந்த சகோதரி 2ம் எதிரி என்றால் சரிதான். 1ம் எதிரி 2ம் எதிரியின் கணவர் என்றால் சரிதான். 3ம் எதிரி 1,2 எதிரிகளின் இளைய மகள் என்றால் சரிதான். எதிரிகள் மூவரும் கேரள மாநிலத்தில் உள்ள கேலிகட்டில் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

3. 3ம் எதிரி தன்னுடைய பள்ளி படிப்பு, கல்லூரி படிப்பு, முதுநிலை படிப்பு எங்கு படித்தார் என்ற விபரம் தெரியுமா என்றால் 3ம் எதிரி யு.ஜி கோவையில் படித்தார். மேற்படி என் மகன் அருண்ராம் எழுதிவைத்த கடிதத்தின் மூலமாக 3ம் எதிரி கேலிகட்டில் முதுநிலை படிப்பு படித்தார் என்பதை தெரிந்து கொண்டேன்.

4. 1ம் எதிரி கேலிகட்டில் பிரிண்டிங்பிரஷ் நடத்தி வருகிறார் என்றால் சரிதான். அவர் சாதாரணா எளிமையான வசதிபடைத்த குடும்பம் என்றால் அதை பற்றி தெரியாது. முக்கியமான விஷசங்கள் தவிர திண்டுக்கலுக்கு

எதிரிகள் மூவரும் அதிகம் வருவது இல்லை என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய மகள் திருமணத்திற்கு திண்டுக்கலலுக்கு வந்த பிறகு எதிரிகள் 2 முறை தான் காலிகட்டில் இருந்து திண்டுக்கல் வந்து உள்ளார் என்றால் நான் ஈரோட்டில் வசிப்பதால் எனக்கு அதன் விபரம் தெரியாது.

5. என் குடும்பத்திற்கும் எதிரிகள் குடும்பத்திற்கும் பரிச்சேயம் கிடையாது என்று சொன்னாலும் அதனால் எதிரிகள் குடும்பத்தை பற்றியோ அவர்களுடைய குணாதிசியங்கள் பற்றியோஎனக்கு தெரியாது என்றால் எதிரிகள் பற்றி ஓர் அளவு தெரியும் அதிகமாக தெரியாது. என் மகன் இறந்த பிறகு கொடுத்த புகாரில் 3வது எதிரி என் மகனை காதலித்ததாகவோ, 1,2 எதிரிகள் மிரட்டி எனது மகனுக்கு மனஉளைச்சல் கொடுத்ததாக குறிப்பிடவில்லை என்றால் நான் புகார் கொடுத்தபோது என் மகன் மூன்றாம் எதிரி காதலித்து ஏமாதியதாகவும் 1,2 எதிரிகள் அதற்கு உடைந்தையாக இருந்து என் மகனுக் கெட்டபெயர் ஏற்படும் வகையில் இருந்தார்கள்என்பது தெரிந்தும் 3ம் எதிரிக்கு அந்த இரவு 17.06.2014 தேதியில் ஈரோடு மாவட்டம் சென்னிமலையில் உள்ள ஒரு திருமணமண்டபத்தில் இரவு நிகழ்ச்சியும் அடுத்த நாள் 18.06.2014 தேதியில் முகூர்த்தமும் வேறுஒரு நபர்க்கு திருமணம் நடப்பது எனக்கு தெரிந்ததால் அப்போது நல்ல எண்ணத்துடன் திருமணம் நடக்கும் போது சம்மந்தம் இல்லாத மணமகனுக்கும் அவருடைய குடும்பத்தாருக்கும் மனசங்கடத்தை கொடுக்கவேண்டாம் என்ற என்னத்தில் நான் என்னுடைய சந்திகளை குறிப்பிட்டு சொல்லவில்லை. பின்னிட்டு 10 நாட்கள் கழித்து என் மகனின் கடைசியாக எழுதிய கடிதத்தை படித்துதான் இவ்வழக்கின் எதிரிகள் மீதுள்ள அனைத்து குற்றங்களையும் தெரிந்து கொண்டேன்.

6. இந்த வழக்கின் 3ம் எதிரி எப்போதும் என்னுடைய மகனை காதலிக்கவோ, ஏமாத்தியதாகவோ,1,2 எதிரிகள் என்னுடைய மகனுக்கு கெட்டபெயர் ஏற்படும் வகையில் உடைந்ததையாக இல்லை என்பதால் தான் அவர்களை பற்றி என்னுடைய புகாரில் குறிப்பிட்டு எந்த விபரமும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அதனால் தான் போலீசார் என்னை 18.06.2014 தேதி அன்று விசாரித்தபோது எதிரிகள் பற்றி குற்றங்கள் புரிந்தனர் என்று எந்த விபரமும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் 18.06.2014 தேதியில் சவகிடங்கில் என் மகனின் பிரேதம் இருந்ததாலும் மேலும் என்னுடைய மனநிலை மிகவும் பாதிக்கப்பட்டதாலும் என் மகன் எழுதிய கடிதம் பின்னிட்டு 10 நாட்கள் கழித்து கிடைத்ததாலும் மேற்கண்ட சங்கதிகளை என்னால் போலீசாரிடம் சொல்ல இயலவில்லை. பின்னிட்டு

போலீசார் 4 முறை என்னை தனியாக விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்தார்கள். மேலும் பின்நாள் விசாரிக்கபட்டதில் அனைத்து விவரங்களையும் போலீசாரிடம்சொன்னேன்.

7. நான் மாண்புமிகு மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்தில் ஈரோடு 5 ஆண்டுகளாக மாவட்ட குற்றதுறை அரசு வழக்கறிஞராக இருந்துள்ளேன். தற்சமயம் 5 வருடங்களாக மாவட்ட உரிமையியல் அரசு வழக்கறிஞராக பணிபுரிந்து வருகிறேன். மேற்கண்ட பணிகளில் இருந்த காரணத்தினால் ஈரோடு காவல்துறை எனக்கு செல்வாக்கு உண்டு என்றுசொன்னால் சரியல்ல. நான் அரசு வழக்கறிஞராக இருப்பதால் ஒரு புகாரை எப்படி எழுத வேண்டும், ஒரு குற்றத்தைத நிருபிக்க என்ன என்ன ஆதாரங்கள் வேண்டும் என்ற விபரங்களை அனைத்தும் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். மேலும் என் மகன் இழந்தன் காரணமாக மிகவும் மனவேதனை அடைந்து நான் தொழிலுக்கு 6,7 மாதங்கள் வரமுடியாது சூழ்நிலைக்கு தள்ளப்பட்டேன்.

8. நான் புகார் கொடுத்தபோது என் மகன் மூன்றாம் எதிரி காதலித்து ஏமாதியதாகவும் 1,2 எதிரிகள் அதற்கு உடைந்தையாக இருந்து என் மகனுக் கெட்டபெயர் ஏற்படும் வகையில் இருந்தார்கள்என்பது தெரிந்தும் 3ம் எதிரிக்கு அந்த இரவு 17.06.2014 தேதியில் ஈரோடு மாவட்டம் சென்னிமலையில் உள்ள ஒரு திருமணமண்டபத்தில் இரவு நிகழ்ச்சியும் அடுத்த நாள் 18.06.2014 தேதியில் முகூர்த்தமும் வேறுஒரு நபர்க்கு திருமணம் நடப்பது எனக்கு தெரிந்ததால் அப்போது நல்ல எண்ணத்துடன் திருமணம் நடக்கும் போது சம்மந்தம் இல்லாத மணமகனுக்கும் அவருடைய குடும்பத்தாருக்கும் மனசங்கடத்தை கொடுக்கவேண்டாம் என்ற என்னத்தில் நான் என்னுடைய சங்திகளை குறிப்பிட்டு சொல்லவில்லை. பின்னிட்டு 10 நாட்கள் கழித்து என் மகனின் கடைசியாக எழுதிய கடிதத்தை படித்துதான் இவ்வழக்கின் எதிரிகள் மீதுள்ள அனைத்து குற்றங்களையும் தெரிந்து கொண்டேன், இந்த வழக்கின் 3ம் எதிரி எப்போதும் என்னுடைய மகனை காதலிக்கவோ, ஏமாத்தியதாகவோ,1,2 எதிரிகள் என்னுடைய மகனுக்கு கெட்டபெயர் ஏற்படும் வகையில் உடைந்ததையாக இல்லை என்பதால் தான் அவர்களை பற்றி என்னுடைய புகாரில் குறிப்பிட்டு எந்த விபரமும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அதனால் தான் போலீசார் என்னை 18.06.2014 தேதி அன்று விசாரித்தபோது எதிரிகள் பற்றி குற்றங்கள் புரிந்தனர் என்று எந்த விபரமும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் 18.06.2014 தேதியில் சவகிடங்கில் என் மகனின் பிரேதம் இருந்ததாலும் மேலும் என்னுடைய மனநிலை மிகவும் பாதிக்கப்பட்டதாலும் என் மகன் எழுதிய கடிதம்

பின்னிட்டு 10 நாட்கள் கழித்து கிடைத்ததாலும் மேற்கண்ட சங்கதிகளை என்னால் போலீசாரிடம் சொல்ல இயலவில்லை என்று தற்சமயம் வழக்கிற்காக வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

9. என்னுடைய முதல் விசாரணையில் 4,5 ஆகிய பத்திகளில் சொல்லியுள்ள விபரங்கள் எதுவும் புகாரிலோ அல்லது 18.06.2014 தேதியில் போலிசார் விசாரித்தபோதோ சொல்லவில்லை என்று சொன்னால் 28.06.2014ம் தேதியில் என் மகனின் இறப்பிற்கு முன்பு கடைசியாக அவர் எழுதிய கடிதம் கிடைத்த பின்புதான் என் மகனின் இறப்பிற்கான முழுககாரணத்தை தெரிந்துகொண்டேன் பின்னிட்டு போலீஸ் விசாரணையில் அனைத்து சங்கதிகளையும் கூறியுள்ளேன்.

10. நான் எனது மகனின் விருப்பத்திற்கிணங்க எனது மனைவியை சமாதான படுத்தி 2013ம் ஆண்டு அக்டோபர் மாதம் எனது மகளின் திண்டுக்கல் வீட்டில் இருந்து காரில் கிளம்பி கள்ளிக்கோடு செல்வதற்காக புறப்பட்டோம். நாங்கள் திண்டுக்கல்லில் இருந்து புறப்பட்டபோது காலை 10.30 மணிக்கு எதிரிகள் 1 மற்றும் 2 இருவருக்கும் அலைபேசி மூலமாக தகவல் தெரிவித்தோம். அப்பொழுது மேற்கண்ட எதிரிகள் என்ன காரணத்திற்காக வருகிறீர்கள் என்று கேட்டார்கள் அதற்கு நான் நல்ல விசயமான திருமணம் பற்றி பேச வருகிறோம் என்று கூறினேன்.மேலும் எதிரிகள் சம்மதத்தின் பெயரில் நானும்,என் மனைவியும் மாலை 6 மணி அளவில் எதிரிகளின் வீட்டிற்கு சென்றோம். அங்கு சென்று பார்த்தபோது எதிரிகளின் வீடு வெளியில் பூட்டபட்டு இருந்தது. நான் 1வது மற்றும் 2வது எதிரிகளை என்னுடைய அலைபேசி மூலம் அவர்கள் வீட்டில் இருந்து பலமுறை அழைத்தேன் ஆனால் அவர்கள் எனது அழைப்பை ஏற்கவிநான் எனது மகனின் விருப்பத்திற்கிணங்க எனது மனைவியை சமாதான படுத்தி 2013ம் ஆண்டு அக்டோபர் மாதம் எனது மகளின் திண்டுக்கல் வீட்டில் இருந்து காரில் கிளம்பி கள்ளிக்கோடு செல்வதற்காக புறப்பட்டோம். நாங்கள் திண்டுக்கல்லில் இருந்து புறப்பட்டபோது காலை 10.30 மணிக்கு எதிரிகள் 1 மற்றும் 2 இருவருக்கும் அலைபேசி மூலமாக தகவல் தெரிவித்தோம். அப்பொழுது மேற்கண்ட எதிரிகள் என்ன காரணத்திற்காக வருகிறீர்கள் என்று கேட்டார்கள் அதற்கு நான் நல்ல விசயமான திருமணம் பற்றி பேச வருகிறோம் என்று கூறினேன்மேலும் எதிரிகள் சம்மதத்தின் பெயரில் நானும்,என் மனைவியும் மாலை 6 மணி அளவில் எதிரிகளின் வீட்டிற்கு சென்றோம். அங்கு சென்று பார்த்தபோது எதிரிகளின் வீடு வெளியில் பூட்டபட்டு இருந்தது. நான் 1வது மற்றும் 2வது எதிரிகளை என்னுடைய அலைபேசி மூலம் அவர்கள் வீட்டில் இருந்து

பலமுறை அழைத்தேன் ஆனால் அவர்கள் எனது அழைப்பை ஏற்கவில்லை. அதன் பின் இருட்டி விட்டதால் நானும் என் மனைவியும் அங்கு இருந்து திரும்பிவிட்டோம்எதிரிகளின் மேற்கண்ட செயல் எனக்கு மிகவும் அவமானமாகவும், அசிங்கம் பட்டதுபோல் எனக்கு மனநிலையை ஏற்படுத்தியது என்று வழக்கை நிருபிக்கவேண்டும் என்பதால் பின்னிட்டு பொய்யாக சாட்சியம் அளித்தேன் என்றால் சரியல்ல. ஆனால் என்னால் மேலே சொல்லப்பட்ட சங்கதிகள் யாவும் உண்மையாக நடந்தவை ஆகும்.

11. பொதுவாக பெண்பார்க்க செல்வது என்றால் என்னுடைய ஒரு மகள் கோமதி மருமகன் சரவணவெங்கட்ராமன், என் மகன் அருண்ராம் ஆகியோரை அழைத்து செல்லாமல் நானும், என் மனைவியும் சென்றாதாக சொல்வது பின்னிட்டு வழக்கிற்காக பொய்யாக சொல்கிற சங்கதி ஆகும் என்பதாலும் உண்மையை அவ்வாறு பெண் பார்க்க செல்லாத காரணத்தினால்தான் அவர்களை அழைத்து செல்லவில்லை என்று சொன்னால் பெண் பார்க்க சென்றது விருப்பத்தை தெரிந்து கொள்வதற்காக தான் சென்றோம். என் மருமகனும் மேற்கண்ட யோசனையும் எனக்கு கூறினார். அதே சமயம் எனது மகன் சென்னையில் மருத்துவமனை நடத்தி வந்ததால் அவர் ஊரில் இல்லை. ஆகவே பெண் வீட்டார் விருப்பத்தை தெரிந்து கொள்வதற்காக சென்ற போது நானும், என் மனைவி மட்டும் சென்றோம்.

12. அவ்வாறு நானும், என் மனைவியும் பெண் பார்க்க செல்லவில்லை என்பது நிரூபிக்கபட்டுவிடும் என்பதால்தான் மேற்கண்ட சங்கதி இந்த வழக்கில் முக்கியமான அம்சமாக இருந்தபோதிலும் எனது மருமகனை சரவணவெங்கட்ராமனை சாட்சியாக அரசுதரப்பில் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. விசாரணை அதிகாரி எனது மருமகனை ஒரு சாட்சியாக அழைத்தபோதுத எனது மருமகன் 2ம் எதிரியின் உடன்பிறந்த சகோதரர் என்பதால் தங்கள் குடும்பத்திற்குள் பிரச்சனை ஏற்பட்டுவிடும் என்பதை நான் அறிந்துகொண்டேன்.

13. மேலும் இந்த வழக்கில் சரவணவெங்கட்ராமனை விசாரித்தால் 3வது எதிரி இறந்துபோன அருண்ராமை எப்போதும் காதலிக்கவில்லை என்கிற விபரம் நீதிமன்றத்திற்கு தெரியவரும் என்ற காரணத்தினால் நான் மாவட்ட குற்றவியல் அரசு வழக்கறிஞராக இருந்தபோதும் அவரை விசாரிக்க நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. என் மருமகனுக்கும், இறந்துபோன என் மகனான அருண்ராமுறிக்கும் 3வது எதிரிக்கும் உள்ள காதல் விவரங்கள் முழுவதும் தெரியும் எனது மருமகனின்

அறிவுறுத்தலின் பெயரில் தான் நான் 2013ல் அக்டோபர் மாதத்தில் எதிரிகளின் வீட்டிற்கு எனது மனைவியுடன் முன்அறிவிப்பு கொடுத்து சென்றேன்.

14. 28.06.2014 போலீசார் என்னை விசாரித்த வாக்குமூலத்தில் என் மகனை 3ம் எதிரியான மஞ்சு ஏமாற்றியவிபரமோ, மஞ்சு பொற்றோர்களான 1,2 எதிரிகளை எனது மகனை அவதூறாக பேசியவிபரமோ எனக்கு தெரியாது என்று சொல்லியுள்ளேன் என்றால் நான் சொல்லியுள்ளேன் மேலும் மேற்கண்ட தேதியில் தான் என் மகனின் இறப்பு கடிதம் கிடைக்க பெற்றேன். 4வது முறையாக 30.06.2014 தேதியில் என்னை போலீசார் விசாரித்தபோது நான் ஏற்கனவே கொடுத்த வாக்குமூலத்தில் மஞ்சுவும், என் மகனும் காதலித்த விசயத்தை சொல்லவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் என் மகனின் இறப்பிற்கு முன்பு எழுதிய கடிதம் கிடைத்தபின்பு தான் முழுவிசயம் தெரிந்தது. எனவே போலீஸ் விசாரணையில் அதை அனுசரித்து வாக்குமூலம்கொடுத்தேன்.

15. 5வது முறையாக 26.12.2014ல் காதல் தோல்வியால் இறந்துவிட்டான் என்று நாங்கள் நினைத்து ஈரோடு வடக்கு காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பெயரில் வடக்கு காவல் நிலைய குற்ற எண். 340/2014ல் சட்டப்பிரிவு 174 குற்றவியல் விசாரணை நடைமுறை சட்டத்தின்படி வழக்கு பதிவு செய்யப்பட்டதாக சொல்லியுள்ளேன்என்றால் சரிதான். அதனால் அனுமானத்தின் அடிப்படையிலும் என்னுடைய மகன் ஏன் தற்கொலை செய்துகொண்டார் என்பதற்கான உண்மையான காரணத்தை மறைத்தும் பொய்யாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சம்பவம் நடந்து சுமார் 12 வருடங்கள் ஆனதாலும் எதிரிகள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் மற்றும் மாண்புமிகு உச்சநீதிமன்றம், மீண்டும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் ஆகியவைகளில் மாறி மாறி ரிட்மனுக்கள் தாக்கல் செய்து காலதாமதம் ஏற்பட்டதால் சில விசயங்கள் என் மனதில் ஞாபககத்தில் இல்லாமல் இருக்கும், மேலும் எதிரிகள் தாக்கல் செய்த மேற்கண்ட நீதிமன்றங்களில் எதிரிகள் தாக்கல் செய்த அனைத்து வழக்குகளும் எதிரிகளுக்கு பாதகமாக ஏற்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டது.

16. மேற்படி இந்த வழக்கில் எதிரிகள் பினைவேண்டி தாக்கல் செய்த மனுக்கள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் இந்த வழக்கில் தற்கொலை இறப்பு கடிதம் (Suicide note letter) இருப்பதால் அது குறித்து உரிய விசாரணை நீதிமன்றம் தான் முடிவு செய்யப்பட வேண்டும் என்று பினை மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டது என்றாலும் சம்பவம் நடந்து

சுமார் 12 வருடங்கள் ஆனதாலும் எதிரிகள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் மற்றும் மாண்புமிகு உச்சநீதிமன்றம், மீண்டும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் ஆகியவைகளில் மாறி மாறி ரிட்மனுக்கள் தாக்கல் செய்து காலதாமதம் ஏற்பட்டதால் சில விசயங்கள் என் மனதில் ஞாபககத்தில் இல்லாமல் இருக்கும் என்று வழக்கிற்காக பொய்யாக செல்கிறேன் என்றால் சரியல்ல. மேலும் இந்த வழக்கில் 3வது எதிரி என் மகனை காதலித்தாகவோ, அலைபேசியில் அழைத்தாகவோ எந்த விதமான எழுத்துபூர்வமான ஆதாரங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேலும் நான் மிகவும் என் மகனின் இறப்பால் எனது மனநிலை பாதிக்கப்பட்டு இருந்ததால் நான் உடனடியாக என் மகனின் மருத்துவமனை மற்றும் தங்கி இருந்த அறை சென்னையில் இருந்ததால் நான் சென்னை செல்வதற்கு பல மாதங்கள் ஆகிவிட்டது பின்னிட்டு என்னிடம் அவர்கள் காதலித்திற்கான எழுத்துபூர்வமாகவும் மற்றும் சில ஆதாரங்களும் என்னிடம் உள்ளது. காவல் ஆய்வாளார் விசாரணை முடித்துவிட்டதாலும் மேல் நீதிமன்றங்களில் எதிரிகளின் நீதி போராண்மை மனுக்கள் நிலுவையில் இருந்ததாலும் நான் பின்னிட்டு விசாரணை நீதிமன்றத்தில் எந்த நேரத்திலும் மேற்படி ஆவணங்கள் சமர்பிக்கலாம் என்ற விபரம் தெரியும் என்ற காரணத்தினாலும் எப்போது வேண்டுமானலும் அந்த ஆவணங்களை சமர்பிக்க தயாராக உள்ளேன்.

17. என்னுடைய மகன் அருண்ராமிற்க்கு 3ம் எதிரி அலைபேசியில் அழைத்தற்கான கால் ரிகார்ட்ஸ் ஆதாரங்கள் எதுவும் சமர்பிக்கவில்லை என்றால் சரியல்ல. ஆதாரங்கள் பின்னிட்டு கிடைத்ததால் தற்சமயம் அந்த ஆவணங்களை ஒப்பபடைக்க தயாராகஉள்ளேன். வழக்கிற்காக வேண்டி பின்னிட்டு வழக்கை நிருபிக்கவேண்டும் என்பதற்காக ஆதாரங்களை பொய்யாக உருவாக்கி சமர்பிப்பதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எப்போதும் 3வது எதிரி அருண்ராமை அலைபேசியில் அழைத்ததும் இல்லை பேசியதும் இல்லை என்பதாலும் அருண்ராமுடன் எங்கும் தனிப்பட்ட முறையில் சென்றதும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 15.06.2014 அன்று நானும், என் மனைவியும் தனது மகன் அருண்ராமை சென்னையில் உள்ள மருத்துவமனையை மூடிவிட்டு ஈரோடு வந்துவிடுமாறு கண்டிப்புடன் கூறியதால் என்னுடைய மகன் ஈரோடு வந்தார் உண்மையில் பல் மருத்துவ தொழில் சரியான முறையில் செய்யமுடியாததாலும் சென்னையில் உள்ள பல் மருத்துவமனையை சரியாக நடத்த முடியாததாலும் மிகுந்த மன வருத்தத்தில் இருந்தார் என்றும் அங்கு அவருடைய நண்பர் எங்களுக்கு தகவல் தெரிவித்தன் பெயரில் நானும், என் குடும்பத்தாரும் அருண்ராமை அழைத்தோம் என்றும்

அந்த மனஉளைச்சல் காரணமாகவும் தன்னால் பல் மருத்துமனை தொழிலை நன்றாக செய்யமுடியவில்லை என்ற காரணத்தினாலும், அவர் மிகவும் உணர்ச்சிவசபடகூடிய நபர் என்பதால் தற்கொலை செய்து கொண்டார் என்றால் சரியல்ல. என் மகன் சென்னை மயிலாப்பூரில் பிரதானசாலையில் பல் மருத்துவமனை அமைத்து சிறப்பாக கவனித்து வந்தார். 3வது எதிரியுடன் ஏற்பட்ட காதல் உறவாலும், 3வது எதிரி எனது மகனை நம்பவைத்து ஏமாற்றியதாலும் மிகவும் மனவேதனையுடன் இருக்கிறார் என என் மகனின் நண்பர்கள் மற்றும் என் சகோதரர் மகன் கூறியதால் நானும், என் குடும்பத்தாரும 15.06.2014 தேதியில் எங்களுடன் வந்து சில நாட்கள் இருந்து என் மகனை சமாதானபடுத்தி அனுபுவதற்காக தான் அவரை அங்கு இருந்து அழைத்து இருந்தோம். மேலும் மருத்துவமனை நல்ல வருமானத்துடனும் அவர் மேற்படி படிப்பு படிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தது என்பது தான் உண்மை.

18. என் மகன் சென்னை மயிலாப்பூரில் பிரதானசாலையில் பல் மருத்துவமனை அமைத்து சிறப்பாக கவனித்து வந்தார். 3வது எதிரியுடன் ஏற்பட்ட காதல் உறவாலும், 3வது எதிரி எனது மகனை நம்பவைத்து ஏமாற்றியதாலும் மிகவும் மனவேதனையுடன் இருக்கிறார் என என் மகனின் நண்பர்கள் மற்றும் என் சகோதரர் மகன் கூறியதால் நானும், என் குடும்பத்தாரும 15.06.2014 தேதியில் எங்களுடன் வந்து சில நாட்கள் இருந்து என் மகனை சமாதானபடுத்தி அனுபுவதற்காக தான் அவரை அங்கு இருந்து அழைத்து இருந்தோம். மேலும் மருத்துவமனை நல்ல வருமானத்துடனும் அவர் மேற்படி படிப்பு படிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தது என்பது தான் உண்மை என்பது தற்சமயம் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் அதனால் தான் சென்னையில் உள்ள இறந்துபோன அருண்ராம் நண்பர்கள் யாரையும் குறிப்பாக எனக்கு தகவல் சொன்ன நபர் யார் என்பது குறித்து புகாரிலோ,போலீசார் வாக்குமூலத்திலோ சொல்லிவில்லை என்றாலும் அருண்ராமின் இறப்பை ஏற்படுத்திய மனஉளைச்சலுக்கு காரணம் குறித்து நிருபிக்கும்பொருட்டு இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. எனது மகனின் இறப்பு கடிதத்தில் அவரது நண்பர்கள் பற்றி தெளிவாக கூறியுள்ளார்.

19. இந்த வழக்கில் என் மகன் எழுதியதாக சொல்லப்படகூடிய தற்கொலை இறப்பு கடிதம் அறையில் இருந்ததாக சொல்லப்பட கூடிய அறையில் புலன் விசாரணையின் போது காவல் ஆய்வாளர் வந்து அறையை பரிசோதனை செய்தார் அது எனக்கு தெரியும் என்றால் சரிதான். என் மகனின் அறையை 18.06.2014ம் ஆண்டு அதிகாலை காவல் ஆய்வளார் மற்றும்

காவலர்கள் ஆய்வு செய்த போது நான் என் மகனின் அறையில் இல்லை அப்போது தரைதளத்தில் இருந்தேன். சந்திரமோகன் என்பவரும், லோகநாதன் என்பவரும் போலீசாரை அழைக்க மேலே உள்ள என் மகனின் அறைக்கு சென்றார்கள்.

20. காவல் ஆய்வாளர் என் மகனின் அறையை ஆய்வு செய்த போது அங்கு எதுவும் தற்கொலை இறப்பு கடிதம் இல்லாத காரணத்தினால் சோதனையில் கிடைக்கவில்லை என்றால் சரியல்ல. எனது மகன் பயன்படுத்திய மேல் மாடி அறையில் உள்ள கபோடில் நிறைய மருத்துவபுத்தகங்கள் இருந்தன அதில் நானும், என் மனைவியும் 28.06.2014ம் ஆண்டு சென்று சுத்தம் செய்த போது ஒரு புத்தகத்தில் கொத்தாக வெள்ளை தாள்கள் சிறிது வெளியே நீட்டிக்கொண்டு இருந்தது. அதை நான் படித்து பார்த்து காவல் நிலையத்தில் கடிதம் மூலம் ஒப்படைத்தேன்.

21. எனது மகன் பயன்படுத்திய மேல் மாடி அறையில் உள்ள கபோடில் நிறைய மருத்துவபுத்தகங்கள் இருந்ததாகவும் அதில் நானும், என் மனைவியும் 28.06.2014ம் ஆண்டு சென்று சுத்தம் செய்த போது ஒரு புத்தகத்தில் கொத்தாக வெள்ளை தாள்கள் சிறிது வெளியே நீட்டிக்கொண்டு இருந்ததாகவும் அதை நான் படித்து பார்த்து காவல் நிலையத்தில் கடிதம் மூலம் ஒப்படைத்ததாகவும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையில் இறந்து போன என்னுடைய மகன் அருண்ராம் எந்தவிதமான தற்கொலை இறப்பு கடிதம் எழுதிவைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய மகன் எழுதிய கடிதம் தான். என் மகனின் கையெழுத்து நன்கு தெரியும். நான் ஒப்படைத்த கடிதத்தில் காவல் ஆய்வாளர் படிவம் 91யை கைபற்றினார் அதில் நான் கையொப்பமிட்டேன். பின்னர் காவல் ஆய்வளார் எனது மகனின் கையொப்பமும் அதை ஒப்பிட்டு பார்க்க என் மகன் கல்லூரியில் பயன்படுத்திய அவர் கைப்பட எழுதிய நோட்டு புத்தகங்களையும் மற்றும் டைரியும் மற்றும் மருத்துகல்லூரியில் என் மகன் படித்த ஸ்பைரல்பைடிங் காலேஸ் நோட்டு ஒப்படைக்கும்படி கேட்டதன் பெயரில் நான் காவல் நிலையத்தில் காவல் ஆய்வளாரிடம் ஒப்படைத்தேன். மேலும் அந்த 3 புத்தங்களையும் காவல் ஆய்வளார் படிவம் 91ன் மூலம் கைப்றினார் என்னிடம் கையொப்பம் பெற்றார். பின்னிட்டு மேற்படி ஆவணங்கள் மற்றும் என் மகனின் தற்கொலை கடிதம் ஆகியவை பகுப்பாய்வுக்கு அனுப்பட்டன. Finger print expert அறிக்கை அனுப்பியதாக கேள்விப்பட்டேன்.

22. உண்மையில் தற்கொலை இறப்பு கடிதம் என் மகன் தான் எழுதினார்

என்று வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையில் என் மகன் தற்கொலை செய்து கொண்ட அறையில் எந்தவிதமான புத்தகங்கள், நோட்டுகள் எதுவும் அறையில் இல்லை என்பதாலும் நான் தாக்கல் செய்த அ.சா.பொ.ஆ.2 முதல் அ.சா.பொ.ஆ.5 பின்னிட்டு வழக்கை நிருபிக்கும் பொருட்டு பழைய பயன்படுத்தப்படாத நோட்டுக்களையும் 2008ம் ஆண்டு உரிய பயன்படுத்தப்படாத டைரியும் வேறொருவர் துணைக்கொண்டு என்னுடைய ஆலோசனையின் பெயரில் நிரப்பி காவல் ஆய்வாளரிடம் ஒப்படைக்கப்பட்டது என்றால் சரியல்ல. போலீசார் காவல் துறையினர் வழக்கில் தயார் செய்த பார்வை மகஜரிலும் கபோடில் புத்தகங்கள், நோட்டுக்கள் இருந்தது காட்டப்பட்டுள்ளது. மேலும் என் மகனின் கையொப்பம் வேறுயாரும் பக்கபக்கமாக எழுத முடியும் என்பது சாத்தியம் இல்லை.

23. என்னுடைய மகனுக்கு டைரி எழுதும் பழக்கம் இல்லை என்றால் சரியல்ல. மேலும் என் மகன் எழுதியதாக சொல்லப்படும் தற்கொலை இறப்பு கடிதத்தில் உள்ள கையெழுத்தை ஒப்பிடுவதற்கு இறப்பதற்கு முன்பான குறுகிய காலத்திற்குள் என்னுடைய மகனால் எழுதப்பட்ட ஆவணங்கள் எதுவும் ஒப்படைக்கபடவில்லை என்றால் சரியல்ல. என் மகன் இறுதியாண்டு மருத்துவ படிப்பில் கல்லூரியில் உபயோகித்த ரெகார்டு நோட்ஸ் , ஸ்பைரல் பைண்டிங் நோட், ஆகியவை என் மகன் இறப்பதற்கு முன்பு குறுகிய காலத்தில் எழுதப்பட்டதாகும்.

24. வழக்கிற்காக வேண்டி மேற்கண்ட சங்கதிகளை பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தற்கொலை இறப்பு கடிதம் என்னால் தயார் செய்யப்பட்டதால்தான் Accused என்ற வார்த்தை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் மகன் வழக்கறிஞரின் மகன் என்பதால் மேற்சொன்ன வார்த்தையை சாதாரணமாக உபயோகிக்க முடியும். 1,2 எதிரிகள் சாட்சி சதாசிவம் மற்றும் நிர்மலாவிடம் அலைபேசியில் மிரட்டியதாக சொல்லப்பட்ட சங்கதிகள் நான் தற்கொலை இறப்பு கடிதத்தை பார்த்தப்பிறகுதான் அவர்களிடம் அலைபேசி மூலம் பேசினேன் என்று சொல்லியுள்ளேன் உண்மையில் அவ்வாறு 1,2 எதிரிகள் எந்தவித பேச்சும், மிரட்டலும் மேற்படி சதாசிவம் மற்றும் நிர்மலாவிடம் மேற்கொள்ளவில்லை என்பதால்தான் அவ்வாறு மேற்படி தகவல்கள் மகன் இறந்துபிறகுகூட அவர்கள் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி மருத்துவர் சதாசிவம் அவரது மனைவி மருத்துவர் நிர்மலா இருவர் நெருங்கிய உறவினர்கள்.எதிரிகள் மூவரும் தனித்தனியாக மேற்படியாளர்ரிடம் பேசி என் மகனை மிரட்டியதோடு மற்றும் இல்லாமல் அவருடைய பெயரை கலங்கப்படுத்தி எச்சரிக்கைவிடுத்துள்ளது பற்றி

மேற்படி இருவரும் என்னிடம் அலைபேசியில் தகவல் கொடுத்து எனது மகனை சென்னையில் இருந்து புறப்பட்டு வரசொன்னார்கள்.

25. மேற்படி சங்கதிகளை எனது ஆலோசனையின் பெயரில் சதாசிவம்,நிர்மலா ஆகியோர் உதவியுடன் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி மருத்துவரிடம் எதிரிகளுக்கு எந்த முன்விரோதமும் இல்லை அவ்வாறு கோரவேண்டிய அவசியமும் இல்லை. என்னுடைய முதல் விசாரணையில் 8ஆவது பத்தியில் நாங்கள் கள்ளிக்கோட்டை சென்று திரும்பிய பின்னரும் 3வது எதிரி தொடர்ந்து என் மகனிடம் அலைபேசியிலும் மற்றும் மடிக்கணினியிலும் தொடர்ப்பு கொண்டு என் மகனிடமும் ஆசைவார்த்தைகள் பேசி காதலை வளர்த்து வந்தார் என்பதை போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. நானும், என் மனைவியும் கள்ளிக்கோட்டைக்கு சென்று வந்தபின்பும் தொடர்ந்து என் மகனிடம் அலைபேசியிலும்,மடிக்கணினியிலும் பேசி வந்தார் என்பது உண்மை. மேலும் ஒரு கட்டத்தில் 3வது எதிரி மயிலாப்பூர் சென்னைக்கு தனது படிப்பு சான்றிதழ்லுடன் அவரது வீட்டைவிட்டு ஓடிவந்துவிடுவதாகவும் கூறியதனால் என் மகன் மிகவும் வேதனைபட்டார்.

26. நானும், என் மனைவியும் கள்ளிக்கோட்டைக்கு சென்று வந்தபின்பும் தொடர்ந்து என் மகனிடம் அலைபேசியிலும்,மடிக்கணினியிலும் பேசி வந்தார் என்பது உண்மை. மேலும் ஒரு கட்டத்தில் 3வது எதிரி மயிலாப்பூர் சென்னைக்கு தனது படிப்பு சான்றிதழ்லுடன் அவரது வீட்டைவிட்டு ஓடிவந்துவிடுவதாகவும் கூறியதனால் என் மகன் மிகவும் வேதனைபட்டார் என்று வழக்கிற்காக வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் அதனால் தான் மேற்கண்ட சங்கதியை போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் மனவேதனையால் சில சங்கதிகளை போலீஸ் விசாரணையில் கூறாமல் விட்டுயிருப்பேன். உண்மையில் 3வது எதிரி இளங்கலை படிப்பு படித்துக்கொண்டு இருக்கும்போது என்னுடைய மருமகன் சரவணவெங்கட்ராமன் 2ம் எதிரியான அவருடைய அக்காவிடம் 3ம் எதிரியை தன்னுடைய மைத்துனருக்கு திருமணம் செய்து கொடுக்கலாமா என்று கேட்டார் என்றும் அதற்கு அவர்கள் 3ம் எதிரி மேற்கொண்டு மேற்படிப்பு படிக்க வேண்டும் என்பதாலும் மேலும் நெருங்கி உறவில் திருமணம் செய்யவேண்டாம் என்பதாலும் அவருடைய குடும்பத்தார் மற்றும் 3ம் எதிரி ஆலோசித்து திருமணம் செய்ய ஒப்புக்கொள்ளவில்லை என்றால் எனக்கு தெரியாது. அவ்வாறு என் மருமகன் சரவணவெங்கட்ராமன் எப்போதும் கூறியதில்லை.

27. மேற்கண்ட காரணத்தினால்தான் என் குடும்பத்தாருக்கும் எதிரிகளின்

குடும்பத்தாருக்கும் பேச்சுவார்த்தை இல்லை என்பதால் தான் சரவணவெங்கட்ராமனை சாட்சியாக விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய குடும்பத்திற்கும் எதிரிகளின் குடும்பத்திற்கும் வேறு எந்த பகையும் இல்லை. என் மகனின் தற்கொலைக்கு எதிரிகள் காரணமாக இருந்தார்கள் என்பது தான் உண்மை. எனது மருமகனை விசாரணை அதிகாரி சாட்சியாக அழைத்தும் அவர் தனது குடும்பத்திற்குள் பிரச்சனை வேண்டாம் என மறுத்துவிட்டதாக என் மருமகன் தான் கூறினார்.மேற்படி சங்கதி வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பின்னிட்டு 3ம் எதிரிக்கு நிச்சயம் ஆனது என்று கேள்விப்பட்டு என்னுடைய மனைவி அ.சா.2 2ம் எதிரியின் தாயிடத்தில் எதிரிகளின் குடும்பத்தை கேவலமாக திட்டியதாக 2ம் எதிரி தாய் அவர் கூறியதன் பெயரில் 2ம் எதிரி கள்ளிக்கோட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. நானோ எனது மனைவியோ எதிரிகளின் குடும்பாத்தாரிடமோ, 2ம் எதிரியின் தாயிடமோ கடந்த 11 ஆண்டுகளுக்கு மேலாக பேசுவதும் இல்லை எந்த தொடர்பும் இல்லை. என்னுடைய வழக்கு படி என் மகன் இறப்பதற்கு 6 மாதங்களுக்கு முன்பே 3ம் எதிரி எனது மகனை திருமணம் செய்ய மறுத்துவிட்டார்கள் என்று தெரிந்தும் என்னுடைய மகன் தற்கொலை செய்து கொண்டார் என்பதற்கு எதிரிகள் எந்தவிதத்திலும் பொறுப்பாக மாட்டார்கள் உண்மையில் 3ம் எதிரி எப்பொழுதும் என் மகனை காதலிக்கவில்லை என்னுடைய மகன் ஒருவேலை ஒருதலை காதலாக 3ம் எதிரியை திருமணம் செய்ய விரும்பி இருந்தாலும் அதை பற்றி 3ம் எதிரிக்கு தெரியாது அதற்கு 3ம் எதிரி பொறுப்பாகவுமாட்டார் என்றால் சரியல்ல 3ம் எதிரி என் மகன் இறப்பதற்கு 1வாரம் முன்பு வரை அலைபேசியிலும், மடிக்கணினியிலும் தொடர்பில் இருந்தார் என்பதற்கு என்னிடம் ஆதாரங்கள் உள்ளது. மேற்படி சங்கதிகள் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

28. 3ம் எதிரி அவருடைய வாழ்க்கையை அமைத்துக்கொள்ள எல்லா உரிமைகளும் உண்டு எதிரிகள் என்னுடைய மகன் மரணத்திற்கு காரணமாக எவ்வித குற்ற செயல்களிலும் ஈடுபடவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது மகனை உயிருக்கு உயிராக காதலித்து பின் 3ம் எதிரி முழுவதுமாக ஏமாற்றிய செயலும் மற்றும் 1,2எதிரிகள் என் மகனின் நற்பெயருக்கு கலங்கம் விளைவித்து உறவினர்களிடமும் தவறாக நபர் என்று சித்தறித்து அவர் பெயரை கெடுத்ததில்தான் என்

மகன் தற்கொலை எண்ணம் கொண்டு தனது இறப்பை தானோ தேடி கொண்டார். எனவே என் மகனின் இறப்பிற்கு மூன்று எதிரிகளும் காரணம் ஆவார்கள்.மேற்படி சங்கதிகள் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை:– இல்லை